





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## மார்ச் - 10.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்









# இந்திய நிகழ்வுகள்

- ஐ.நா. சபையின் உணவு மற்றும் விவசாய துறை, **உலகில் இயற்கை உணவுகள் அதிகமாக உள்ள மாநிலங்களின் பட்டியலை** வெளியிட்டது. இதில் சிக்கிம் (இந்தியா) மாநிலம் **100 சதவீதம் இயற்கை உணவுகள் உள்ள மாநிலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது**.

- ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஏப்ரல் 13, 1919-ல் பஞ்சாபின் **ஜாலியன் வாலாபாக்கில்** நடந்த படுகொலையில் சுமார் 1600 பேர் கொல்லப்பட்டனர். இதன் **நூறாவது நினைவு நாள் (ஏப்ரல் 13 2019)** வருவதை முன்னிட்டு **பிரிட்டிஷ் அரசு இந்த படுகொலைக்கு மன்னிப்பு கேட்கத்** தயாராகி வருகிறது.

- **சீனா மற்றும் இந்தியா** ஆகிய நாடுகளுக்கிடையே **துறை சார்ந்த ஒத்துழைப்பை** அதிகரிக்கும் வகையில் **இந்தியாவானது தனது 3வது ஐ.டி வளாகத்தை சூஸு நகரில் (சீனா)** கட்டமைத்து வருகிறது.

## உலக நிகழ்வுகள்

- சர்வதேச நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதில் **உலகில் மிக மகிழ்சியான நாடுகள் பட்டியலில், டென்மார்க், பின்லாந்து, நார்வே, ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முதலிடம்** பிடித்துள்ளது.

- மத்திய ஐரோப்பிய நாடான **சுவிட்சர்லாந்தின் விஸ்ப் மாவட்டத்தில்** உள்ள **ராண்டாவின் ஜெர்மேட் மற்றும் கிரேசேன் என்ற இரு மலைகளை** இணைக்கும் வகையில், **உலகின் மிக நீண்ட நடை தொங்கு பாலம்** திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் 278 அடி உயரத்தில், 1,620 அடி நீளம் மற்றும் 2 அடி அகலத்தில் கட்டப்பட்டுள்ளது. **இந்த பாலத்திற்கு யோரப் என்று பெயரிடப்பட்டுள்ளது**.

## விளையாட்டு நிகழ்வுகள்

- கோவையில் நடைபெற்ற **ஹீரோ கால்பந்து தொடரில் சென்னை**

**சிடி அணி**, மினர்வா பஞ்சாப் அணியை வீழ்த்தி **சாம்பியன்** பட்டம் வென்றது.

- **இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே அமைதியற்ற சூழல் நிலவுவதால் இரு நாட்டு விளையாட்டு வீரர்களும் மற்ற நாட்டுடன் விளையாட தடை** விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, ஆசிய ஜுனியர் மல்யுத்த போட்டிகள் மற்றும் காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டிகளை நடத்துவதில் இருந்து இந்தியாவக்கு விலக்கு அளித்துள்ளது.

## நியமனங்கள்

- பாகிஸ்தானில், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, **இந்து தலித் சமூகத்தை சேர்ந்த கிருஷ்ணகுமாரி கோலி என்ற பெண், பாகிஸ்தான் நாடாளுமன்ற மேலவையின் ஒரு நாள் தலைவராக** பணியாற்றியுள்ளார். இவர் பாகிஸ்தான் செனட் சபையில் தலைவர் ஆன முதல் இந்து தலித் பெண் ஆவார்.